பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

24 03 2024 **SUNDAY** **7.15 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் வகையில் **Saksham** என்ற கைபேசி செயலியை தேர்தல் ஆணையம் தொடங்கியுள்ளது.

2. தமிழகத்தில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதல்கட்ட பயிற்சி இன்று அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்றது.

3. பீகார் மாநிலத்தில் ஐக்கிய ஜனதாதளம் சார்பில் போட்டியிடும் 16 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

4. மாஸ்கோ தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இன்று ரஷ்யாவில் ஒருநாள் துக்கம் அனுசரிக்கப்பட்டது.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், குஜராத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற மும்பை அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

----- *<u>இனி விரிவான செய்திகள்</u>* ----

<<<<<<>>>>>>

மக்களவைத் தேர்தலில் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்ற உறுதிபாட்டுடன் தேர்தல் ஆணையம் செயல்பட்டு வருகிறது.

100 சதவீத வாக்களிப்பை உறுதி செய்யும் வகையில் எந்தவொரு வாக்காளரும் தேர்தல் நடைமுறையிலிருந்து விடுபட்டுவிடக்கூடாது என்பதில் மிகுந்த கவனத்துடன் செயல்பட்டு வருகிறது.

85 வயதுக்கு மேற்பட்டோர் மற்றும் 40 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளை வாக்களிக்க செய்யும் விதமாக அவர்களின் வீடுகளுக்கே சென்று வாக்குகளை பெறுவதற்கான நடைமுறைகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது.

ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் சக்கர நாற்காலிகளுடன், மாற்றுத்திறனாளிகளையும், வயது முதிர்ந்தோரையும் அழைத்துச்சென்று அவர்களது வாக்குகளை பெறுவதற்கான முயற்சிகளையும் வரும் மக்களவைத் தேர்தலில், தேர்தல் ஆணையம் செயல்படுத்த உள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் வகையில், **Saksham** என்ற கைபேசி செயலியையும் தேர்தல் ஆணையம் இன்று தொடங்கியுள்ளது.

வாக்குச்சாவடிகளில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோருக்கு அளிக்கப்படும் வசதிகள் குறித்த தகவல்களை இந்த செயலி மூலம் அறிந்துகொள்ளலாம்.

முதல் முறை வாக்காளர்களுக்கு உதவும் வகையில், தேவையான வசதிகளையும் வாக்குச்சாவடிகளில் அமைத்துத்தர தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது.

வாக்குச்சாவடிகளில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, வாக்காளர்களுக்கு உதவி செய்வதற்கான மையங்கள், உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்து தருவதற்கான ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது.

பெண் வாக்காளர்கள் அதிகம் உள்ள பகுதிகளில் அவர்களுக்கான தனி வாக்குச்சாவடிகளையும் அமைத்து தருவதற்கு தேர்தல் ஆணையம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான முன்னேற்பாட்டுப் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதல்கட்ட பயிற்சி இன்று அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்றது.

திருவள்ளூர் மாவட்டத்தில், வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான தேர்தல் பயிற்சி வகுப்பை பார்வையிட்டபின் செய்தியாளர்களிடம் பேசிய மாவட்ட ஆட்சியர் டாக்டர் பிரபு சங்கர், தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளின்படி, நேர்மையாகவும், சுதந்திரமாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் வாக்குப்பதிவை நடத்துவதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பீகார் மாநிலத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள ஐக்கிய ஜனதாதளம் சார்பில் 16 மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். இதில் பெரும்பாலானவர்கள் ஏற்கனவே மக்களவை உறுப்பினர்களாக உள்ளவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்சியின் மாநிலத்தலைவர் திரு உமேஷ் குஷ்வாஹா மற்றும் மூத்த தலைவர் திரு சஞ்ஜய் ஜா, ஆகியோர் இந்த வேட்பாளர் பட்டியலை இன்று பாட்னாவில் வெளியிட்டனர்.

<<<<<<>>>>>>

வெங்காயம் ஏற்றுமதிக்கான தடையை மறு உத்தரவு வரும் வரை நீட்டிப்பதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

உள்நாட்டில் வெங்காயம் விலையை கட்டுப்படுத்தவும், போதிய அளவில் மக்களுக்கு கிடைக்கவும் வகை செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வர்த்தகத்துக்கான தலைமை இயக்குனர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 31-ஆம் தேதிமுதல், வெங்காய ஏற்றுமதிக்கான தடை முடிவுக்கு வருவதையடுத்து, இந்த கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டில் வெங்காய விலையை கட்டுப்படுத்தும் நோக்கில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் அதன் ஏற்றுமதிக்கான தடை உத்தரவை மத்திய அரசு பிறப்பித்தது.

<<<<<<>>>>>>

ஹோலிப்பண்டிகை நாளை கொண்டாடப்படுவதையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், ஹோலிப்பண்டிகை எழுச்சி மிக்க, மகிழ்ச்சியான திருநாள் என்று குறிப்பிட்டுள்ளார்.

மக்களிடையே நம்பிக்கையையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தும் நன்நாளாக ஹோலிப்பண்டிகை அமைந்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இப்பண்டிகையின் வண்ணங்கள் வேற்றுமையில் ஒற்றுமை என்ற நாட்டின் ஒருமைப்பாட்டை உணர்த்தும் வகையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்திற்கான வளர்ச்சிப்பாதையில் புதிய உத்வேகத்துடன் செயல்படுவதற்கு ஹோலிப்பண்டிகை ஊக்கம் அளிப்பதாகவும் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள ஹோலிப்பண்டிகை வாழ்த்து செய்தியில், புதிய ஆற்றலையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தும் நன்நாளாக ஹோலிப்பண்டிகை அமைந்துள்ளது என்று கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

கோவிட் பெருந்தொற்றிலிருந்து மீள்வதற்கு உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட கொள்கை முடிவுகள் மற்றும் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் மிகவும் பயனுள்ளவையாக அமைந்திருந்தன என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ரஷ்யா – உக்ரைன் போரின்போது உலக அளவில் ஏற்பட்ட வர்த்தக, பொருளாதார பிரச்சினைகளுக்கும் இந்தியா உரிய முறையில் தீர்வுகண்டுள்ளதாக தெரிவித்தார்.

உணவு தானியம், எரிபொருள், உரங்கள் ஆகியவற்றின் விலைகள் சர்வதேச சந்தையில் கடுமையாக உயர்ந்த போதிலும், அதனை திறமையாக இந்தியா கையாண்டதாக குறிப்பிட்டார்.

இந்த காலக்கட்டத்திலும் நாட்டின் பணவீக்கம் கட்டுக்குள் வைக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஏழை எளிய மக்களுக்கு தொடர்ந்து உணவு தானியங்கள் வழங்கப்பட்டதாகவும், சிறு தொழில்கள், பெண்கள் மற்றும் மூத்த குடிமக்களுக்கான உதவிகளும் மருத்துவ சேவைகளும் தடையின்றி வழங்கப்பட்டதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

உலக காசநோய் தடுப்பு தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது.

காசநோய்க்கு காரணமான பாக்டீரியா கண்டுபிடிக்கப்பட்ட தினமான மார்ச் 24-ஆம் தேதி ஒவ்வொரு ஆண்டும் காசநோய் தடுப்பு தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

மைக்கோ பாக்டரிம் என்ற பாக்டீரியா கிருமி நுரையீரல் உள்ளிட்ட பகுதிகளை பாதிப்படையச் செய்து, காசநோய்க்கு வழிவகுப்பது ஆராய்ச்சியின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இந்நோயினால் சிறுநீரகம், தண்டுவடம், மூளை உள்ளிட்ட பகுதிகள் பாதிப்படைவதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

நீரிழிவு, ஊட்டச்சத்து குறைபாடு, போன்றவற்றிற்கும் இந்நோய் வழிவகுப்பதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

அதிக அளவு புகையிலை பயன்பாடு, காசநோய் பாதிப்பை அதிகப்படுத்துவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

1983-ஆம் ஆண்டு முதல், உலக காசநோய் தினம் கடைபிடிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

<<<<<<>>>>>>

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் கடந்த வெள்ளிக்கிழமையன்று நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்த 133 பேருக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக இன்று அந்நாட்டில் ஒருநாள் துக்கம் அனுசரிக்கப்பட்டது.

அந்நாட்டின் கொடி அரைகம்பத்தில் பறக்கவிடப்பட்டது.

அரசு நிகழ்ச்சிகளும் ரத்து செய்யப்பட்டன.

தொலைக்காட்சி சேனல்களும் துக்கம் அனுசரிக்கப்படுவதையொட்டி, நிகழ்ச்சிகளை மாற்றியமைத்தன.

இந்த தீவிரவாத தாக்குதலுக்கு ஐ எஸ் தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

<<<<<<>>>>>>

சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனிவாவில் நடைபெறும் 148-ஆவது நாடாளுமன்றங்களுக்கு இடையிலான சந்திப்புக்கூட்டத்தில் மாநிலங்களவை தலைவர் திரு **Harivansh** தலைமையிலான இந்திய நாடாளுமன்ற குழுவினர் பங்கேற்கவுள்ளனர்.

ஆசிய பசிபிக் அரசியல் குழுவினர், பிரிக்ஸ் நாடாளுமன்ற ஒத்துழைப்பு அமைப்பு மற்றும் மகளிர் உறுப்பினர்களின் கூட்டமைப்பு நடத்தும் பல்வேறு அமர்வுகளிலும் இந்திய குழுவினர் பங்கேற்கவுள்ளனர்.

தாய்லாந்து நாட்டுடனான நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து கருத்துக்களை பரிமாறிக்கொள்கின்றனர்.

**<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், குஜராத் – மும்பை அணிகளுக்கு இடையேயான ஆட்டம் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

அகமதாபாதில் நடைபெறும் இப்போட்டியில், டாஸ் வென்ற மும்பை அணி முதலில் பந்து வீச செய்ய தீர்மானித்துள்ளது.

--------

**Thomas** மற்றும் **Uber** கோப்பை பேட்மிண்டன் போட்டிக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியா ஆடவர் பிரிவில், தாய்லாந்து, இங்கிலாந்து மற்றும் இந்தோனேஷியாவை எதிர்கொள்கிறது.

இந்தியா மகளிர் பிரிவில் சீனா, கனடா மற்றும் சிங்கப்பூரை எதிர்கொள்கிறது.

இப்போட்டி, சீனாவின் **Chengdu–**வில் அடுத்த மாதம் 27ஆம் தேதி தொடங்கி, மே மாதம் 5ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

**<<<<<<END>>>>>>**